சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 29.06.2018

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் ஆனி மாதம் 15–ம் நாள் (ஜீன் திங்கள் 29–ம் நாள்:–29.06.2018) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் தெருவிளக்கு பிரிவு தொடர்பாக திண்டுக்கல் தொழிலாளர் இணை ஆணைய பணியாளர் இழப்பீட்டு நீதிமன்றத்தில் ப.இ.10/2013 என்ற வழக்கு எண்ணின்படி சின்னமனூர் நகராட்சி ஆணையாளரை முதல் பிரதிவாதியாக கொண்டு நடைபெற்றுவந்த வழக்கின் தீர்ப்பானது இவ்வலுவலகத்திற்கு 09.11.2017ம் தேதி கிடைக்கப்பெற்றது. அத்தீர்ப்பின்படி தெருவிளக்கு ஒப்பந்த நிறுவனத்தில் பணி புரிந்து விபத்தின் காரணமாக காலம் சென்றதாக குறிப்பிட்ட திருமதி.பாப்பாத்தி க/பெ.(லேட்) சந்திரன் என்பவரின் மகன் திரு.காமுத்துரை என்பவருக்கு மேற்படி வழக்கில் முதல் பிரதிவாதியான நகராட்சி ஆணையாளர் முதன்மை வேலையளிப்பவர் என்ற உறவுமுறை உள்ளது என்றும், முதன்மை வேலை அளிப்பவர் என்ற அடிப்படையில் 6வது எதிர்மனுதாரரான சன்வியூ சிஸ்டம் நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளராக பணிபுரியும் போது கடந்த 07.12.2011ம் தேதியன்று சின்னமனூர் 4வது வார்டு பொட்டி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள தெருவிளக்குகளை சரிபார்க்கும் பணியினை செய்து கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு காமுத்துரை இறந்துவிட்டார் என்பதால் விபத்து சமயத்தில் முதலாம் எதிர்மனுதாரருக்கும் இறந்த காமுத்துரை என்பவருக்கும் இடையே முதன்மை வேலையளிப்பவர் (முதலாளி) தொழிலாளி என்ற உறவு முறை உள்ளது என்றும் மேலும் முதலாவது எதிர் மனுதாரரான ஆணையாளர் 6வது எதிர்மனுதாரருக்கும் ஒப்பந்தம் அமலில் உள்ள போது பணியிடை விபத்து ஏற்பட்டு காயமடைந்து காமுத்துரை இறந்துள்ளார் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே விபத்துவமயத்தில் முதலாம் எதிர் மனுதாரரான சின்னமனூர் நகராட்சிக்கும் இறந்த காமுத்துரை என்பவருக்கும் இடையே முதன்மை வேலையளிப்பவர்–வேலையாள் என்ற உறவு முறை உள்ளது என்ற காரணத்தால் இழப்பீட்டுத் தொகை ரூ.420642/–யை விபத்து நடந்த தேதியில் இருந்து வைப்பீடு செய்யும் தேதி வரை 12% வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறும், இழப்பீட்டுத் தொகையினை 6வது எதிர்மனுதாரரான சன்வியூ சிஸ்டம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்ற உத்திரவின் மீது நகராட்சி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை குறித்து வழகறிஞரான திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் (Standing Counsel for Municipality / Government Advocate) அவர்களின் சட்டக்கருத்துரு வழங்க கோரப்பட்டதில் நீதிமன்ற உத்திரவின்படி நகராட்சியால் இழப்பீடு தொகையினை தொழிலாளர் இணை ஆணையத்தில் செலுத்தி மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்ய சட்டக்கருத்துரு அளித்துள்ளார்.

மேற்படி நீதிமன்ற உத்திரவின்படி இழப்பீட்டுத் தொகையை சின்னமனூர் நகராட்சியால் திண்டுக்கல் தொழிலாளர் இணை ஆணையத்தில் செலுத்திவிட்டு அத்தொகையினை கோயம்புத்தூர் சன்வியூ சிஸ்டம் என்ற நிறுவனத்திடம் வசூல் செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகையை செலுத்த நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.நீதிமன்ற உத்திரவின்படி இழப்பீட்டுத் தொகையில் (வட்டியின்றி) முதற்கட்ட தொகையான ரூ.420642/– மட்டும் வட்டியின்றி திண்டுக்கல் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையத்தில் செலுத்தி உரிய இரசீதுடன் மேல்முறையீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேல்முறையீடு செய்வதற்கான (வழக்கறிஞர் கட்டணம் உட்பட) செலவினத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.6560/2016/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **402, நாள்.29.06.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60T4428 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பிளாட்பாரம் பழுதடைந்து உள்ளதால், மேற்படி வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. மேற்படி வாகனத்தின் பணிகளை தன் சொந்த செலவில் மேற்கொண்டு அதற்கான தொகை ரூ.3500/—ஐ மட்டும் வழங்கக்கோரி மேற்படி வாகனத்தின் திரு.ரா.ராஜேஷ் துப்புரவு பணியாளர் (ஓட்டுனர் கூடுதல் பொறுப்பு) என்பவர் பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகை ரூ.3500/—ஐ மட்டும் வாகனத்தின் ஓட்டுனர் திரு.ரா.ராஜேஷ் என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | சுகாதாரப் பிரிவில் குப்பைகள் அகற்றும் பணியின் அவசர அவசரம் கருதி வாகனத்திற்கு செலவு செய்யப்பட்ட தொகையினை ஓட்டுனர் திரு.ரா.ராஜேஷ் என்பவருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். |
| **தீர்மான எண், நாள்** | **403 (ந.க.எண்.2336/2016/எச்1)** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பாளையம் ரோடு பொன்னுச்சாமி தியேட்டர் எதிர்புறம் உள்ள காலியான இடத்தில் ( 15x10) நீளம் 15 அடி அகலம் 10 அடி அளவு கொண்ட காலியிடத்தில் தரைகடை மாதவாடகை அடிப்படையில் அமைத்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920ன்படி பொது ஏலக்கட்டுப்பட்டு விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **404**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கட்டப்பட்ட மெயின் ரோட்டில் அமைந்துள்ள IDSMT கடை எண்.11–ஐ திரு.எஸ்.சந்திரசேகர் என்பவர் பெயரில் உள்ளது. திரு.எஸ்.சந்திரசேகர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தொடர்ந்து கடையினை நடத்த் முடியாத காரணத்தினால் அவரது பங்குதாரர் திரு.ச.கார்த்திக் பெயருக்கு, பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.782/2018/அ2)

**தீர்மான எண், நாள்** **405**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60Z5198 (மார்ஷல்) வருடாந்திர காப்பீடு 15.07.2018ம் தேதியோடு முடிவடைவதால், மேலும் ஓராண்டு காலத்திற்கான வருடாந்திர காப்பீடு தொகை ரூ.7940/–ஐ (15.07.2018 முதல் 14.07.2019 வரை) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.4458/2014/இ2).

**தீர்மான எண், நாள்** **406**
**தீர்மானம்**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவு, ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுது நீக்கம், தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், தண்ணீர் தொட்டிகளில் உள்ள குழாய்களில் ஏற்படும் பழுதுகள் போன்றவற்றை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, உடனுக்குடன் குடிநீர் பிரிவு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும், தலைமை நீரேற்று நிலையம் காவல், வடிகால் நிலையம் காவலர் பணி மேற்கொள்ளவும் ஜீலை **2018** முதல் டிசம்பர் **2018** வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9.90** இலட்சத்திற்கு மேற்படி பணிகளை ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2).

**தீர்மான எண், நாள்** **407**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.7

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கண்ணம்மாள் கார்டன், லெட்சுமி நகர் மற்றும் சிவசக்தி நகரில் நகராட்சியின் சார்பாக பார்க் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை பாதுகாக்கும் பொருட்டு மேற்கண்ட இடத்தினை அளவீடு செய்து ஜே.சி.பி இயந்திரம் கொண்டு சுத்தம் செய்து முள்வேலி அமைத்து பெயர் பலகை வைக்கும்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.**8.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்திற்கான தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1590/2018/இ1).

**தீர்மான எண், நாள்** **408**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.8

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.**2751**க்கு **15.07.2018**ம் தேதியோடு வருடாந்திர காப்பீடு முடிவடைவதால் **15.07.2018** முதல் **14.07.2019** வரை உள்ள காலங்களுக்கு ஒரு வருட காலத்திற்கான வருடாந்திர காப்பீடு தொகை ரூ.**14105/–**ஐ யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. அனுமதிக்கலாம்
2. வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.6260/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **409**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகனம் எண்.TN60S**6634**க்கு நான்கு டயர்களும் தேய்மானம் அடைந்து பயன்படுத்த இயலாத சூழலில் உள்ளதால், புதியதாக நான்கு எண்ணம் டயர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.28000/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | 1. அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.7057/2014/இ2) |
| **தீர்மான எண், நாள்** | **410** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சின்னமனூர் கிராமம், வார்டு —A, பிளாக் எண்.3, நகரளவு எண்.13/3B1 (பழைய சர்வே எண்.504/1B) ல் உள்ள 0.54 ¾ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்திற்கு விவசாய நில உபயோக பயன்பாட்டில் இருந்து வணிக உபயோகத்திற்கு மாற்றும் பொருட்டு திரு.D.ராஜாராம் த/பெ.P.துரைசாமி என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்காணும் விவரம் குறித்து பொது மக்கள் ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகள் பெற விளம்பரம் அறிவிப்பு செய்யும் வகையில் இவ்வலுவலக ந.க.எண்.1738/2018/எப்1, நாள்.22.05.2018ம் தேதிய கடிதத்தின்படி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் ஏதேனும் ஒன்றில் விளம்பரம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது, அதன்படி தினசூரியன் நாளிதலிலும், டிரன்டி மிரர் (Trinity Mirror) என்ற ஆங்கில நாளிதழிலும் மேற்காணும் விவரம் 25.05.2018ம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. எனவே அதன்படி டிரன்டி மிரர் (Trinity Mirror)ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணமாக ரூ.8290.80/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. வருவாய் நிதியில் வழங்குவதை ஏற்கலாம். (ந.க.எண்.1738/2018/எப்1).** |
| **தீர்மான எண், நாள்** | 411, நாள். |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

********

பொருள் எண்.11

சின்னமனூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ம் ஆண்டுக்கு ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள உரிய கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான மயான ரோட்டில் இருபுறமும் தடுப்புச் சுவருடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி வ.எண்.24 | 265.00 |
| 2 | பி.டி.ஆர்.வாய்க்கால் வடக்கு பகுதி, சீப்பாலக்கோட்டை ரோடு குறுக்குத் தெரு (திருநகர்), கஸ்பா ரோடு குறுக்குத் தெரு, தினசரி மார்க்கெட் ரோடு, அக்ரஹாரம் ரோடு, பழைய நகராட்சி அலுவலக தெரு, காவல் நிலையம் ரோடு, பெருமாள் கோவில் ரோடு, பள்ளிக்கோட்டை மெயின் ரோடு மற்றும் மலையாண்டி தெருக்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் சாமிகுளம் 2வது தெரு, சாமிகுளம் 2வது குறுக்குத் தெரு, காந்தி நகர் காலனி 7வது மற்றும் 8வது தெருக்கள், நகராட்சி ரோடு, அழகர்சாமி நகர் குறுக்குத் தெரு மற்றும் விஸ்வன்குளம் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி, வார்டு எண்.2,3,4,5,10,11,17,19,24,26 | 185.00 |
| 3 | இந்நகராட்சிக்குச் சொந்தமான எல்லுக்கட்டு ரோடு, ராதாகிருஷ்ணா ரைஸ்மில் குறுக்குத் தெரு, காந்தி நகர் காலனி 7வது தெரு (மாணவர் விடுதி), டோபி காலனி, பகவதியம்மன் கோவில் தெரு மற்றும் லெட்சுமி நாராயணன் ரோடு ஆகிய இடங்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி, வார்டு எண்.2,3,4,9,10 | 150.00 |
| | மொத்தம் | 600.00 |

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 12981/2018/இ3–ன் 27.6.2018ம் தேதிய கடிதத்தில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு நிதி ஆதார பஙகீடு வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுத் தொகை | : | ரூ. 6.00 கோடி |
| தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | : | ரூ. 2.28 கோடி |
| மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மான்ய நிதி | : | ரூ. 1.80 கோடி |
| மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி | : | ரூ. 1.32 கோடி |
| நகர்ப்புற பஙகளிப்பு | : | ரூ. 0.60 கோடி |

மேற்கண்டவாறு நிதி ஆதார பஙகீட்டின் அடிப்படையில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** 412, நாள்.29.06.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட காலியிடத்தில் மாத வாடகை அடிப்படையில் தரை கடை அமைத்து கடை நடத்துவதற்கு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.50000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. அனுமதிக்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2).

**தீர்மான எண், நாள்** **413**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சின்னமனூர் கிராமம், வார்டு—A, பிளாக்—3, நகரளவு எண்.13/3B1, பழைய சர்வே எண்.504/B-ல் உள்ள 0.54 ¾ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைக் திட்டத்தில் விவசாய நில உபயோக பயன்பாட்டில் உள்ளது. மேற்படி உள்ள இடத்தினை விவசாய நில உபயோக பயன்பாட்டில் இருந்து வணிக உபயோகத்திற்கு மாற்றம் செய்யும் பொருட்டு திரு.D.ராஜாராம் த/பெ.P.துரைசாமி என்பவர் விண்ணப்பத்திருந்தார். எனவே மேற்காணும் பொருள் குறித்து பொது மக்களின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கும் பொருட்டு தினசூரியன் என்ற தமிழ் நாளிதழிலும் டிரன்டி மிரர் என்ற ஆங்கில நாளிதழிலும் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தேனி அவர்களால் செய்தியாது 22.05.2018ம் தேதியன்று வெளியிடப்பட்டது. அதன்படி செய்தி வெளியான நாளிலுருந்து 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக பொது மக்கள் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகளை தெரிவிக்க கால அவகாசம் வழங்கப்பட்டதில், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பொது மக்களிடம் இருந்து எவ்வித ஆலோசணைகளும் ஆட்சேபணைகளும் வரப்பெறவில்லை. எனவே நில உபயோக மாற்றம் தொடர்பாக மேல் நடவடிக்கைக்கு பரிந்துரை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்கள் வழி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் உள்ள இடத்தினை விவசாய நில உபயோகம் பயன்பாட்டில் இருந்து வணிக உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யும் பொருட்டு பரிந்துரை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை வழியாக நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்புவதை ஏற்கலாம். (ந.க.எண்.1738/2018/எப்1)**

**தீர்மான எண், நாள்** **414**
**தீர்மானம்**

*******